**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8129362 B/R 30/08/24

1. District : மாவட்டம் திருவாரூர் | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 3 | Date: நாள் 30/8/2024

2. (i) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்: 106
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended 2018 — Sections பிரிவுகள்: 7
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 29-08-2024
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 16.30 - 21.30
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Com | Time : நேரம் 30-08-2024 / 15.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் FIR | Time : நேரம் 30-08-2024 / 16.00hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தயார் செய்யப்பட்ட புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி இணை ஆணையர் அலுவலகம், வணிகவரித்துறை, திருவாரூர் கோட்டகம் திருவாரூர். 2 Km. கி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. R. சிவராமன் | (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் S. கிளியருபேமாள்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 48/24 | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணை வட்டாட்சியர் | (g) Address : முகவரி H' Sec கணிகாணிப்பாளர் மாவட்ட ஆட்சியரகம், திருவாரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

K.C.S. அருணபாரதி 48/24, S/o K.C சுப்ரமணியன் இணை ஆணையர், வணிகவரித்துறை, திருவாரூர் கோட்டகம் திருவாரூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : 2
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது:

இன்று 30.08.2024 ந்தேதி 15.00 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.B.பூரணி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.K.சிவராமன், த/பெ S.கலியபெருமாள், துணை வட்டாட்சியர, H Section கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர் மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு :-அனுப்புநர் திரு.K.சிவராமன், த/பெ S.கலியபெருமாள், துணை வட்டாட்சியர, H Section கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர் மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, 29.08.2024ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் திரு.அய்யம்பெருமாள் அவர்கள், திருவாரூர் மாவட்டம், திருவாரூர் கோட்டம், தமிழ்நாடு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 30/8/2024 — B. Pooranı 30-08-24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B. POORANI
Rank: நிலை DSP .........No. எண் V&AC, TVR

வணிகவரித்துறை இணை ஆணையர் திரு.அருணபாரதி என்பவர் திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை பகுதிகளில் செயல்படும் கடைகள், சூப்பர் மார்க்கெட்டுகள், மருத்துவமனைகள் மற்றும் தொழில் நிறுவனத்திலிருந்து வணிகவரி செலுத்த வேண்டிய நிறுவன உரிமையாளர்களிடமிருந்து கையூட்டு பெறுவதாக நம்பகமான தகவல் கிடைத்திருப்பதாகவும் மேற்படி அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொள்ள அறிவுறுத்தியதின் பேரில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் மற்றம் குழுவினர்களுடன் 29.04.2024ஆம் தேதி 16.30 மணிமுதல் 21.30 மணி வரை திருவாரூர் மாவட்டம், திருவாரூர் கோட்டம், தமிழ்நாடு வணிகவரித்துறை இணை ஆணையர் அலுவலகத்தில் திடீர்சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது திருவாரூர் கோட்டம், தமிழ்நாடு வணிகவரித்துறை இணை ஆணையர் திரு.அருணபாரதி என்பவர் திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை பகுதிகளில் செயல்படும் கடைகள், சூப்பர் மார்க்கெட்டுகள், மருத்துவமனைகள் மற்றும் தொழில் நிறுனத்திலிருந்து வணிகவரி செலுத்த வேண்டிய நிறுவன உரிமையாளர்களிடமிருந்து வருமானவரி செலுத்துவது தொடர்பான குறைகளை சரிசெய்ய கையூட்டு தொகையாக பெற்று அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.25,000/- தொகை மற்றும் தற்காலிகமாக தங்கியிருக்கும் அறையின் வலது பக்க அறையில் Red Color Sky Bag, GAMEON என்ற Red Color Bag-ல் பச்சை கலர் Cloth Office கவரில் தொகை ரூ.1,00,000/- வைத்திருந்தது தெரியவந்தது. மேற்படி கையூட்டு தொகை சோதனையின் போது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி இணை ஆணையர் திரு.அருணபாரதி என்பவரை விசாரிக்க தொழில் நிறுனத்திலிருந்து வணிகவரி செலுத்த வேண்டிய நிறுவன உரிமையாளர்களிடம் வருமானவரி செலுத்துவது தொடர்பான குறைகளை சரிசெய்ய கையூட்டு தொகையாக மேற்படி ரூ.1,25,000/- பெற்று வைத்திருந்ததாக தெரிவித்துள்ளார். மேலும் இணை ஆணையரை விசாரணை செய்து கொண்டிருந்த போது சுமார் 17.55 மணியளவில் இணை ஆணையர் அறைக்கு வந்த திரு.சுப்பிரமணியன் வயது 59/2024, த/பெ. தியாகராஜன், உதவியாளர், வணிக வரித்துறை அலுவலகம், திருத்துறைப்பூண்டி என்பவர் திருத்துறைப்பூண்டி Commercial Tax Officer திருமதி.வேம்பரசி ஒரு காக்கி கவரில் பணத்தை வைத்து ஸ்டாப்ளர் போட்டு இணை ஆணையர் திரு.அருணபாரதியிடம் கொடுத்து விடுங்கள் என்று கூறியதால் இணை ஆணையரை பார்த்து பணத்தை கொடுக்கவந்ததாகவும், வாரந்தோறும், திருத்துறைப்பூண்டி எல்லைக்குட்பட்ட நிறுவனங்களில் வசூல் செய்யப்படும் தொகையினை CTO தன்னிடம் கொடுப்பார் என்றும், அதனை தான் பெற்று திருவாரூர் இணை ஆணையர் திரு.அருணபாரதியிடம் கொண்டு வந்து கொடுப்பேன் என்றும் தெரிவித்தார். அந்த கவரில் இருந்த ரூ.15,000/- ம் கையூட்டு தொகையும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது மகஜரில் கைப்பற்றப்பட்ட தொகை கூடுதல் ரூ. 1,40,000/- மற்றும் திருவாரூர் கோட்ட, வணிக வரித்துறை இணை ஆணையர் அலுவலக 2024ஆம்

ஆண்டிற்கான வருகை பதிவேடு ஆகியவற்றை இத்துடன் ஆஜர்படுத்துகிறேன். தொழில் நிறுனத்திலிருந்து வணிகவரி செலுத்த வேண்டிய நிறுவன உரிமையாளர்களிடமிருந்து வருமானவரி செலுத்துவது தொடர்பான குறைகளை சரிசெய்ய கையூட்டு தொகையாக ரூ.1,40,000/- பெற்று குற்றமுறு நடவடிக்கையில் ஈடுபட்ட இணை ஆணையர் அருணபாரதி என்பவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். Sd 30/08/2024 (K.SIVARAMAN) DEPUTY TAHSILDAR/SUPERINDENT-H SEC, COLLECTOR OFFICE, THIRUVARUR. Sir, Received a complaint and registered a case in Thiruvarur V&AC Cr.No.03/2024 U/s 106 BNSS and 7 of P.C Act 1988 as amended 2018 on 30.08.2024 at 16.00 Hrs Sd (XXXXXXXXX) 30/08/2024 (B.Poorani) DSP, V&AC, Thiruvarur திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று 29.08.2024-ந் தேதி திருவாரூர் மாவட்டம், திருவாரூர் கோட்டம், தமிழ்நாடு வணிகவரித்துறை இணை ஆணையர் திரு.அருணபாரதி என்பவர் திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை பகுதிகளில் செயல்படும் கடைகள், சூப்பர் மார்க்கெட்டுகள், மருத்துவமனைகள் மற்றும் தொழில் நிறுனத்திலிருந்து வணிகவரி செலுத்த வேண்டிய நிறுவன உரிமையாளர்களிடமிருந்து கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்ட ஆய்வு குழு அலுவலர் திரு.அய்யம்பெருமாள் மேற்படி அலுவலகத்தை திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் இணைந்து திடீர் சோதனை மேற்கொள்ள அளித்த உத்தரவின் பேரில் திரு.R.சிவராமன் வயது 48/2024, த/பெ S.கலியபெருமாள், துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியரகம், திருவாரூர் மாவட்டம் ஆகிய நான் மற்றும் திருவாரூர் மாவட்டம், திருவாரூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரியும், திரு.V.மணிகண்டன் வயது 42/2024, த/பெ N.வேலாயுதம் ஆகியோருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 29.08.2024 ஆம் தேதி 16.00 மணிக்கு சென்றும், மேற்படி தகவலை தெரிவித்தும் அதன் பேரில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திருமதி.B.பூரணி மற்றும் விஜிலென்சு குழுவினருடன் 16.15 மணியளவில் புறப்பட்டு திருவாரூர் மாவட்டம், திருவாரூர் நகரம், துர்காலயா ரோட்டில் தீலிபன் மருத்துவமனை வளாக முதல் தளத்தில் அமைந்துள்ள திருவாரூர் கோட்டம், தமிழ்நாடு வணிகவரித்துறை, இணை ஆணையர் அலுவலகத்திற்கு 29.08.2024 ஆம் தேதி 16.30 மணிக்கு வந்தும், மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கை விபரம் பின்வருமாறு. மேற்கண்ட அலுவலகமானது திருவாரூர் துர்க்காலயா ரோட்டில் தீலிபன் மருத்துவமனை வளாக கட்டிடத்தில் முதல் தளத்தில் வடக்கு புற வாசலுடன் அமைந்துள்ளது, வாசலில் TN 50 G 0697 என்ற எண்ணுள்ள வெள்ளை நிற அரசு வாகனமானது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. திடீர் சோதனை குழுவினர் அலுவலகத்தில் உள்ளே நுழைந்தவுடன் பெரிய அலுவலக அலுவலர்கள் உட்கார்ந்து பணி செய்யும் பெரிய ஹால் இருந்தது, ஹாலை ஒட்டியவாறு இணை ஆணையர் வணிக வரித்துறை அலுவலக அறை இருந்தது. இணை

ஆணையர் அறைக்கு உள்ளே சென்ற போது இணை ஆணையர் இருக்கையில் ஒரு ஆண் நபரும், அவருடைய எதிர்புறம் ஒரு பெண் நபரும் அமர்ந்திருந்தனர். திடீர் சோதனை குழுவினர், அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்ட போது வணிக வரித்துறை இணை ஆணையர் இருக்கையில் அமர்ந்திருந்தவர், தான் திரு.அருணபாரதி, இணை ஆணையர், வணிக வரித்துறை ஆணையர் என அறிமுகம் செய்து கொண்டார். அவர் இருக்கைக்கு எதிர்புறம் அமர்ந்திருவரை விசாரிக்க, தான் திருமதி. V.சங்கீதா, 47/2024 த/பெ. வைரமாணிக்கம், இணை ஆணையரின் நேர்முக உதவியாளர் என்று தெரிவித்தார், அவரிடமும், இணை ஆணையரிடமும் சோதனை குழுவினர் அறிமுகம் செய்து சோதனையானது ஆரம்பிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை குழுவில் இருந்த அலுவலர்களின் விபரம் 1. திரு.R.சிவராமன் வயது 48/2024, த/பெ S.கலியபெருமாள், துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியரகம், திருவாரூர் மாவட்டம், 2. திரு.V.மணிகண்டன் வயது 42/2024, த/பெ N.வேலாயுதம், முதுநிலை வருவாய் ஆய்வாளர், திருவாரூர் தாலுக்கா & மாவட்டம், 3. திருமதி.B.பூரணி, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். மேற்படி திடீர் சோதனையின் போது வணிக வரித்துறை இணை ஆணையர் அலுவலகம், திருவாரூர் அலுவலகத்தில் இருந்த அலுவலர்களின் விபரம்: 1. திரு.K.C.S.அருணபாரதி வயது 48/2024, த/பெ K.C.சுப்பிரமணியன், இணை ஆணையர், வணிகவரித்துறை, திருவாரூர் கோட்டம், திருவாரூர். 2. திருமதி V. சங்கீதா, 47/2024, த/பெ. வைரமாணிக்கம், உதவி ஆணையர்/இணை ஆணையரின் நேர்முக உதவியாளர், திருவாரூர் கோட்டம், திருவாரூர் (இருப்பிட முகவரி : பிளாட் நம்பர். 50, 11 வது குறுக்கு தெரு, ஞானம் அருள்மேரி நகர், தஞ்சாவூர்) 3. திரு.V. ராஜா, 37/24, த/பெ. விஸ்வநாதன், State Tax Officer (Audit), திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 46B, Ganel Street, Sirkazhi, மயிலாடுதுறை) 4. திருமதி.R. மரகதம், 59/24, க/பெ. ஜெயபால் ராஜ், State Tax Officer (Legal Review), திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : G1, RMS complex, Nehruji Street, சீனிவாசபுரம், மயிலாடுதுறை) 5. திரு.R. சுதாகர், 43/24, த/பெ. ராமலிங்கம், Deputy State Tax Officer, திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 444, வடக்கு தெரு, குடிதாங்கி, கும்பகோணம், திருப்புறம்பியம், தஞ்சாவூர் மாவட்டம்) 6. திரு.G. கருணாநிதி, 49/24, த/பெ. குருசாமி, Deputy State Tax Officer (Legal Wing – 1) , திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 1/158, கீழவீதி, சோழன் மாளிகை, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்) 7. திரு.G. பிரவின்குமார், 34/24, த/பெ. கோபிநாதன் Deputy State Tax Officer (Legal Wing – 2) , திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 14A, கல்லூரி சாலை, மேல காவேரி ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்) 8. திருமதி.M. நளினி, 44/24, த/பெ. மோகன் Deputy State Tax Officer (Audit) , திருவாரூர் கோட்டம்,

திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 53B, பண்டரிநாதன் கோவில் தெரு, துறையூர், திருச்சி மாவட்டம்) 9. திருமதி.V. பாலகிருஷ்ணன், 33/24, த/பெ. வைத்தியலிங்கம், Assistant, (A1 – Establishment) , திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 202, மேற்கு தெரு, நெய்வாசல் அஞ்சல், ஒரத்தநாடு தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்) 10. திருமதி.S ஸ்ரீலேகா, 31/24, க/பெ. மகேஷ் Assistant, (A2 – Establishment) , திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 50ம் நம்பர் ரோடு, ஆண்டித்தெரு, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டம்) 11. திருமதி.S.R. புவனேஸ்வரி, 29/24, க/பெ. வினோத்குமார் Assistant, (A3 – அரியர் கலெக்ஷன்) , திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 5/6, காசுக்கார செட்டி தெரு, ராஜகிரி அய்யம் பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம்) 12. திரு.G முருகன், 56/24, த/பெ. கணேசன், Assistant, (A5 – GST Appeal) , திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 125, காட்டு நாயக்கன் தெரு, மருந்து கொத்ததாள ரோடு, நாகப்பட்டிணம் மாவட்டம்) 13. திரு. D. சீனிவாசன், 41/24, த/பெ. தெட்சிணாமூர்த்தி, Assistant, (A6 – Tax Cases) , திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 1/131, கோவில்பத்து தெரு, கடிச்சம்பாடி, கும்பகோணம் தாலுக்கா தஞ்சாவூர் மாவட்டம்) 14. திருமதி. V. முத்துலெட்சுமி, 58/24, க/பெ. சரவணன் Junior Assistant, (B3 – Vehicle Maintanence), திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 414/2, பூக்குளம் புதுநகர், கரந்தை, தஞ்சாவூர் மாவட்டம்) 15. திரு. R. பூபதி, 56/24, த/பெ. ராகவராவ், Junior Assistant, (B4 – Writ Petition), திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : TPS நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர் மாவட்டம்) 16. திருமதி. R. சிவரஞ்சனி, 38/24, க/பெ. சந்தோஷ்குமார், Typist, திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ.5/24, திருநகர், 5வது தெரு, சிங்கபெருமாள் குளம், சீனிவாசபுரம், ரோடு, தஞ்சாவூர் மாவட்டம்) 17. திருமதி. M. அனிதா, 34/24, க/பெ. சந்தோஷ்குமார், Typist, திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ.1886, ஜோதி நகர், காந்திபுரம், தஞ்சாவூர் மாவட்டம்) 18. செல்வி. S. சபானா பேகம், 28/24, த/பெ. செய்யது இப்ராகிம், Typist , திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ.309A, திருமுருகன் நகர், Water Tank Near, பெட்டவாய்தலை, திருச்சி மாவட்டம்) 19. திரு. B. லோகேஷ் அக்சயா, 27/24, த/பெ. பாஸ்கரன், Junior Assistant (Depuation of the oral order of JC from DC Office Mayiladuthurai), திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ.510, முதலியார் தெரு, கோவிந்த புரம், திருவிடை மருதூர் தஞ்சாவூர் மாவட்டம்) 20. திரு. H. அருண்குமார், 38/24, த/பெ. ஹரிகிருஷ்ணன், Record Clerk, திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 2/33, கிழக்கு தெரு, வேற்குடி, ஒரத்தூர், சிக்கல், நாகப்பட்டிணம்) 21. திரு. R. மகேந்திர வர்மன், 60/24, த/பெ. ரெங்கசாமி, (TEXCO) Driver to Joint Commissioner, திருவாரூர் கோட்டம்,

திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 2/133, நடுத்தெரு, கீழ குறுக்கப்பட்டு, பாபநாசம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்) 22. திரு. B. பாலசுப்பிரமணியன், 52/24, த/பெ. பக்கிரிசாமி, Dy. State Tax Officer, O/o Dy. Commissioner (ST) திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 22A, சோமநாதர் கோவில் தெரு, வேதாரண்யம், நாகப்பட்டிணம் மாவட்டம்) 23. திரு. T. சுப்பிரமணியன், 59/24, த/பெ. தியாகராஜன், Assistant, (AI-Statstics) CTO Office, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் கோட்டம், திருவாரூர். (இருப்பிட முகவரி : நெ. 175, ராவடிபள்ளிவாசல் தெரு, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்) சோதனை குழுவினர் இணை ஆணையர் வணிக வரித்துறை திரு.அருணபாரதியை சோதனை செய்த போது அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.25,000/- தொகை இருந்தது, அது குறித்து அவரிடம் விசாரிக்க, வருமானவரி செலுத்துவது தொடர்பான குறைகளை சரிசெய்ய தொழில் நிறுவன உரிமையாளர்களிடமிருந்து பெற்ற கையூட்டு தொகை என்று தெரிவித்தார். நிறுவன உரிமையாளர்களிடமிருந்து பெற்ற கையூட்டு தொகை மேற்படி கையூட்டு தொகை கைப்பற்றப்பட்டது. மேலும் கடந்த இரண்டு நாட்களாக இதுபோன்ற பெற்ற கையூட்டு தொகைகளை தான் தற்காலிகமாக தங்கியிருக்கும் அறையில் வைத்திருப்பதாக திரு.அருணபாரதி தெரிவித்ததால், திடீர் சோதனை குழுவினர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் இணை ஆணையருடன் 17.00 மணியளவில் புறப்பட்டு திருவாரூர் இரயில்வே மேம்பாலம் அருகில் உள்ள குரு நகரில் தெற்கு புறம் நோக்கிய முதல் தளம் கொண்ட வீட்டில் வடக்கு நோக்கி வாசலுடன் இருந்த வீட்டிற்கு சென்று சோதனை செய்த போது, வீட்டின் வலது பக்க அறையில் Red Color Sky Bag, GAMEON என்ற Red Color Bag-ல் பச்சை கலர் Cloth Office கவரில் தொகை இருந்தது. மேலும் வீட்டில் செல்பில் இருந்த பர்ஸ்சிலும் தொகை இருந்தது. மேற்படி தொகையுடன் இணை ஆணையரை அழைத்து கொண்டு திடீர் சோதனை குழுவினர் 17.40 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டு 17.50 மணிக்கு இணை ஆணையர் அலுவலகத்திற்கு மீண்டும் வரப்பட்டது. திடீர் சோதனை குழுவினரால் மேற்படி Red Color Bag-ல் பச்சை கலர் Cloth Office கவரில் தொகையை சோதனை செய்தபோது 500•200 = 1,00,000/- இருந்தது. இதுகுறித்து இணை ஆணையரை விசாரிக்க வருமானவரி செலுத்துவது தொடர்பான குறைகளை சரிசெய்ய தொழில் நிறுவன உரிமையாளர்களிடமிருந்து பெற்ற கையூட்டு தொகை என்று தெரிவித்தார். நிறுவன உரிமையாளர்களிடமிருந்து பெற்ற இணை ஆணையர் வைத்திருந்த கையூட்டு தொகை ரூ.1,00,000/- கைப்பற்றப்பட்டது. மேலும் Red Color Bag, பச்சை கலர் Cloth Office கவர் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் கைப்பற்றபட்ட பர்சை சோதனை செய்ய ரூ.3,600/- இருந்தது. இது குறித்து இணை ஆணையரை விசாரிக்க தனது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அத்தொகை ரூ.3,600/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் இணை ஆணையரை விசாரிக்க தான் கடந்த 28.12.2023 ந்தேதி முதல் திருவாரூர் வணிக வரித்துறை இணை ஆணையராக பணிக்கு சேர்ந்தேன் என்றும், திருவாரூர், மயிலாடுதுறை,

நாகப்பட்டிணம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கு இணை ஆணையராக பணியாற்றி வருவதாகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் உதவி ஆணையர்கள் தனக்கு கீழ் பணிபுரிந்து வருவதாகவும், திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர், திருத்துறைப்பூண்டி, நன்னிலம், மன்னார்குடி Commercial Tax Officer அலுவலர்கள் பணிபுரிந்து வருவதாகவும், நான்கு மாவட்டங்களில் உள்ள 40 இலட்சத்திற்கு மேல் தொழில் செய்து வரும் அனைத்து தொழில் நிறுவன உரிமையாளர்கள் ஒவ்வொரு மாதமும், தொழிலுக்குரிய வணிக வரியினை ஆன்லைனில் பதிவு செய்து விடுவார்கள் எனவும், அந்த ஆன்லைன் பதிவுகளை தான் பார்வையிட்டு முறையாக வணிக வரி செலுத்தாத நிறுவன உரிமையாளர்களுக்கு CTO மூலமாக தகவல் சொல்லி வணிக வரி செலுத்துவதற்கு நோட்டீஸ் கொடுப்பது தனது பணி என்றும், தான் இணை ஆணையராக கவனித்து வரும் மாவட்டங்களில் உள்ள தொழில் நிறுவன உரிமையாளர்கள், வணிக வரி செலுத்துவது தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்ய கையூட்டு தொகைகளை வழங்குவார்கள் என்றும், இந்த வாரத்தில் அவ்வாறு கையூட்டாக தான் பெற்று வைத்திருந்த தொகை தான் என்னிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகை என்றும் கூறினார். மேற்கண்ட தொகைகளானது தொழில் நிறுவனம் உரிமையாளர்களிடமிருந்து வணிக வரி செலுத்துவது தொடர்பாக குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கையூட்டாக பெற்று வைத்திருந்த என்ற காரணத்தினால், மேற்கண்ட ரூ.1,25,000/- தொகை மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி இணை ஆணையர் அருணபாரதியின் வாக்குமூலம் தனியாக பதிவு செய்யப்பட்டது. இணை ஆணையரை விசாரணை செய்து கொண்டிருந்த போது சுமார் 17.55 மணியளவில் ஒரு நபர் இணை ஆணையர் அறைக்கு வந்து, இணை ஆணையரை சந்திக்க வேண்டும் என்று கூறினார், அவரிடம் விஜிலென்ஸ் குழுவினர் அறிமுகம் செய்து கொண்டு, அவரை பற்றி விசாரிக்க, தான் திரு.சுப்பிரமணியன் வயது 59/2024, த/பெ. தியாகராஜன், உதவியாளர், வணிக வரித்துறை அலுவலகம், திருத்துறைப்பூண்டி என்று என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு, திருத்துறைப்பூண்டி Commercial Tax Officer திருமதி.வேம்பரசி இணை ஆணையர் திரு.அருணபாரதியிடம் கொடுத்து விடுங்கள் என்று தன்னிடம் ஒரு காக்கி கவரில் பணத்தை வைத்து ஸ்டாப்ளர் போட்டு கொடுத்து அனுப்பியதாக கூறினார். திடீர் சோதனை குழுவினர் அந்த காக்கி கவரினை பெற்று பார்த்த போது, அந்த கவரின் மேல் இந்திய அரசு பணிக்கு மட்டும் என்று சீல் வைக்கப்பட்டும், இடது பக்க ஓரத்தில் அனுப்புகை எழுத்தர், இணை ஆணையர் வணிக வரிகள் (மாநில வரிகள்) (செய) அலுவலகம், 7/215, மெயின் ரோடு, பவித்திரமாணிக்கம், திருவாரூர் - 610 104 என்ற சீல் வைக்கப்பட்டும், 02.08.2024 என்று தேதியிட்டு கையொப்பம் செய்யப்பட்டிருந்தது. பெறுநர் மாநில வரி அலுவலர், மாநில வரி அலுவலகம், எண்.10/18, சன்னதி தெரு, திருத்துறைப்பூண்டி – 614 715 என்று எழுதப்பட்டு பின் செய்யபட்டிருந்த காக்கி கவரை பிரித்த போது 29 ஐநூறு நோட்டுகள், 2 இருநூறு நோட்டுகள், 1 நூறு ருபாய் நோட்டுகள் ரூ.15,000/- தொகை இருந்தது, இது குறித்து திரு.சுப்பிரமணியன், உதவியாளரிடம் விசாரிக்க, வாரந்தோறும்,

திருத்துறைப்பூண்டி எல்லைக்குட்பட்ட நிறுவனங்களில் வசூல் செய்த தொகையினை CTO என்னிடம் கொடுப்பார், நான் அதனை பெற்று கொண்டு திருவாரூர் இணை ஆணையர் திரு.அருணபாரதியிடம் கொண்டு வந்து கொடுப்பேன் என்று கூறினார், மேற்கண்ட ரூ.15,000/- கையூட்டு தொகை என்பதனால் மேற்படி தொகை மற்றும் தொகை வைக்கப்பட்டிருந்த காக்கி கவர் மகஜரில் கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தின் வாசலில் நின்றிருந்த TN 50 G 0697 என்ற எண்ணுள்ள வெள்ளை நிற அரசு வாகனமும் சோதனை செய்யப்பட்டதில் பணமோ, ஆவணமோ கைப்பற்றப்படவில்லை. திருவாரூர் வணிகவரி இணை ஆணையர் அலுவலக 2024 ஆம் ஆண்டிற்கான வருகை பதிவேடு பக்கம் எண்.1 முதல் 107 வரையிலானது மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திருவாரூர் வணிகவரித்துறை இணை ஆணையர் அலுவலகத்தில் இருந்த அலுவலர்களை சோதனை செய்தபோது அவர்களிடம் கீழ்கண்டவாறு தொகைகள் காணப்பட்டது.

| வ. எண். | அலுவர்களின் விபரம் | காணப்பட்ட தொகை விபரம் ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி V. சங்கீதா, 47/2024, த/பெ. வைரமாணிக்கம், உதவி ஆணையர்/இணை ஆணையரின் நேர்முக உதவியாளர், திருவாரூர் | 420 |
| 2 | திரு.V. ராஜா, 37/24, த/பெ. விஸ்வநாதன், State Tax Officer (Audit), திருவாரூர். | 900 |
| 3 | திருமதி.R. மரகதம், 59/24, க/பெ. ஜெயபால் ராஜ், State Tax Officer (Legal Review), திருவாரூர். | 1500 |
| 4 | திரு.R. சுதாகர், 43/24, த/பெ. ராமலிங்கம், Deputy State Tax Officer ,திருவாரு | 1470 |
| 5 | திரு.G. கருணாநிதி, 49/24, த/பெ. குருசாமி, Deputy State Tax Officer (Legal Wing – 1) ,திருவாரூர். | 220 |
| 6 | திரு.G. பிரவின்குமார், 34/24, த/பெ. கோபிநாதன் Deputy State Tax Officer (Legal Wing – 2) ,திருவாரூர். | 220 |
| 7 | திருமதி.M. நளினி, 44/24, த/பெ. மோகன் Deputy State Tax Officer (Audit) ,திருவாரூர். | 470 |
| 8 | திருமதி.V. பாலகிருஷ்ணன், 33/24, த/பெ. வைத்தியலிங்கம், Assistant, (A1 – Establishment) ,திருவாரூர். | 500 |
| 9 | திருமதி.S ஸ்ரீலேகா, 31/24, க/பெ. மகேஷ் Assistant, (A2 – Establishment) ,திருவாரூர். | 60 |
| 10 | திருமதி.S.R. புவனேஸ்வரி, 29/24, க/பெ. வினோத்குமார் Assistant, (A3 – அரியர் கலெக்ஷன்) ,திருவாரூர். | 760 |
| 11 | திரு.G முருகன், 56/24, த/பெ. கணேசன், Assistant, (A5 – GST | 260 |

| | | |
|---|---|---|
| | Appeal) ,திருவாரூர். | |
| 12 | D. சீனிவாசன், 41/24, த/பெ. தெட்சிணாமூர்த்தி, Assistant, (A6 – Tax Cases) ,திருவாரூர். | 220 |
| 13 | திருமதி. V. முத்துலெட்சுமி, 58/24, க/பெ. சரவணன் Junior Assistant, (B3 – Vehicle Maintanence) ,திருவாரூர். | 150 |
| 14 | திரு. R. பூபதி, 56/24, த/பெ. ராகவராவ், Junior Assistant, (B4 – Writ Petition) ,திருவாரூர். | 550 |
| 15 | திருமதி. R. சிவரஞ்சனி, 38/24, க/பெ. சந்தோஷ்குமார், Typist ,திருவாரூர். | 1400 |
| 16 | திருமதி. M. அனிதா, 34/24, க/பெ. சந்தோஷ்குமார், Typist ,திருவாரூர். | 120 |
| 17 | செல்வி. S. சபானா பேகம், 28/24, த/பெ. செய்யது இப்ராகிம், Typist ,திருவாரூர். | 130 |
| 18 | திரு. B. லோகேஷ் அக்சயா, 27/24, த/பெ. பாஸ்கரன், Junior Assistant (Depuation of the oral order of JC from DC Office Mayiladuthurai) ,திருவாரூர். | 110 |
| 19 | திரு. H. அருண்குமார், 38/24, த/பெ. ஹரிகிருஷ்ணன், Record Clerk, திருவாரூர். | 120 |
| 20 | திரு. R. மகேந்திர வர்மன், 60/24, த/பெ. ரெங்கசாமி, (TEXCO) Driver to Joint Commissioner, திருவாரூர். | 530 |
| 21 | திரு. B. பாலசுப்பிரமணியன், 52/24, த/பெ. பக்கிரிசாமி, Dy. State Tax Officer, O/o Dy. Commissioner (ST) திருவாரூர். | 220 |

மேற்கண்ட அட்டவனையில் கண்ட நபர்களிடம் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகள் குறித்து விசாரிக்க அவர்களின் விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததால், மேற்படி தொகைகள் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இச்சோதனையில் கைப்பற்றப்பட்ட தொகையானது திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் தொழில் நிறுவன உரிமையாளர்களிடமிருந்து வணிக வரி கட்டுவது தொட ர்பாக குறைகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவன உரிமையாளர்களிடமிருந்து இணை ஆணையர் திரு.அருணபாரதி லஞ்சபணம் பெற்று வைத்துள்ளார் என்பது விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனை 29.08.2024 ஆம்தேதி 16.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனு, திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும் இதன் நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல்கள் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

B. Poomani
30/08/24

துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவாரூர்.